# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2006 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம்

*(2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2006, மாச்சு மாதம் 31 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2006 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பணச் சட்டம் (திருத்தச்) சட்டம்

[*2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 15/2006*

### பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*422 ஆம் அத்தியாயத்தின் பாகம் VII என்பதற்கான தலையங்கத்தைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டம் அதன் அத்தியாயம் V இன் பாகம் VII என்பதிற் காணப்படும் தலையங்கத்திற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"பாகம் VII

**வங்கித் தொழில் நிறுவனங்களினதும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினதும் கடன் தொழிற்பாடுகளின்மேலதிக ஒழுங்குவிதி"**

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 98ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

***3.*** அத்தியாயம் V இன் பாகம் VII இன் 99 ஆம் பிரிவுக்கு உடன்முன்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 98ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :

"பாகம் VII என்பதற்கான பொருள்கோடல்.

98ஆ. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங் களுக்காக "உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***4.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவு "வர்த்தக வங்கி களால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிக ளாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "வர்த்தக வங்கிகளைத் தடைசெய்யலாம் ; " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளையும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளையும் தடைசெய்யலாம் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில் "எல்லையை நிர்ணயிக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எல்லையை நிர்ணயிக்கலாம் அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அதன் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :

"(இ) வர்த்தக வங்கிகளால் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளால் பொருளாதாரத்தின் இனம் காணப்பட்ட ஏதேனும் துறைக்கு நீடிக்கப்படவுள்ள கடன்களின் குறைந்தபட்ச நூற்று வீதத்தை நிர்ணயிக்கலாம் ;"; அத்துடன்

(ஈ) அதற்கான காப்புவாசகத்தில், "ஏதேனும் வர்த்தக வங்கியைத் தேவைப்படுத்துவதற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் வர்த்தக வங்கியை அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியைத் தேவைப்படுத்துவதாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கி ஒவ்வொன்றினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி ஒவ்வொன்றினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவு "வர்த்தக வங்கிகளின் மூலதனமும் மிகையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளினதும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளினதும் மூலதனமும் மிகையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 104 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் (அ) அத்துடன் (ஆ) என்னும் பந்திகளில் காணப்படும் "வர்த்தக வங்கிகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கிகளால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கிகளாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவு "வங்கித் தொழில் நிறுவனங்களால்" அத்துடன் "அத்தகைய நிறுவனங்களால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "வங்கித் தொழில் நிறுவனங்களாலும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளாலும்" அத்துடன் "அத்தகைய நிறுவனங்களாலும் வங்கிகளாலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*